ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2168/6 - 2020 මාර්තු මස 25 වැනි බදාදා - 2020.03.25
2168/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 40/1973*(I)

**(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்**

(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின் கீழ், சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பவித்ரா வன்னிஆராச்சி,**
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2020, மாச்சு 25.

**ஒழுங்குவிதிகள்**

1. காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1925 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ஆந் திகதிய 7481 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளும் அங்கிலொஸ்டோமியாசிஸ் தொடர்பான ஒழுங்குவிதிகளும், 1933 ஆம் ஆண்டு யூலை மாதம் 7 ஆந் திகதிய 7001 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கொள்ளை நோய்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளும், 1943 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதிய 9157 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பால்வினை நோய்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளும், 1946 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதிய 9570 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நுளம்புகள் மூலம் கடத்தப்படும் நோய்கள் (தடுப்பு) ஒழுங்குவிதியும், மற்றும் 1960 ஆம்

1A - PG 4958 — 517 (2020/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஆண்டு மே மாதம் 6 ஆந் திகதிய 12,125 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளும், "முறையான அதிகாரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்காகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

"முறையான அதிகாரி" என்பது -

(அ) முழு இலங்கைத் தீவு தொடர்பிலும் சுகாதார சேவைப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஆ) பின்வரும் நிருவாக எல்லைகளினுள்ளான இடப்பரப்பொன்றில் -

(i) ஒரு மாநகர சபை எனில், அச்சபையின் முதல்வர் அல்லது அத்தகைய இடப்பரப்பின் சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது மேலதிகச் சுகாதார மருத்துவ அலுவலர்; அத்துடன்

(ii) ஒரு நகர சபை எனில், அத்தகைய நகர சபையின் தலைவர்;

(iii) ஒரு பிரதேச சபை எனில், அப்பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அத்தகைய இடப்பரப்பின் சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது மேலதிகச் சுகாதார மருத்துவ அலுவலர் ; அல்லது

(iv) எந்தச் சபை அல்லது பிரதேச சபை தொடர்பாக அத்தகைய சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்பட்ட புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் அதிகார சபை உருவாக்கப்பட்டு தாபிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் சபை அல்லது பிரதேச சபை;

(இ) ஒரு துறைமுக இடப்பரப்பொன்றில், தனிமைப்படுத்தல் பணிப்பாளர், பிரதித் தனிமைப்படுத்தல் பணிப்பாளர் அல்லது துறைமுக மருத்துவ அலுவலர் அல்லது துறைமுகச் சுகாதார அலுவலகம்;

(ஈ) ஒரு விமான நிலைய இடப்பரப்பொன்றில், தனிமைப்படுத்தல் பணிப்பாளர் அல்லது விமான நிலைய மருத்துவ அலுவலர் அல்லது விமான நிலைய சுகாதார அலுவலகம்;

(உ) ஏதேனும் இராணுவ, கடற்படை அல்லது வான்படைத் தாபனத்தில், அத்தாபனத்தின் மருத்துவ அலுவலர் ; அத்துடன்

(ஊ) பந்திகள் (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் இடப்பரப்பு தவிர்ந்த ஏதேனும் இடப்பரப்பில், அத்தகைய இடப்பரப்பின் மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர்,

என்று பொருளாகும்.

2. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1925 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 7481 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளும் அங்கிலொஸ்டோமியாசிஸ் தொடர்பான ஒழுங்குவிதிகளும், "நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்காகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றன.

"நோய்க்குட்பட்ட இடப்பிரதேசம்" என்பது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டதும் முறையான அதிகாரி தீர்மானிக்கவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்கு நோய்க்குட்பட்ட பிரதேசங்களாக முறையான அதிகாரியினால் நோய்குட்பட்டதாக வெளியிடப்பட்டதுமான ஏதேனும் இடப்பிரதேசம் என்று பொருளாகும்.

3. ஒழுங்குவிதி 1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகத் "துறைமுகச் சுகாதார அலுவலர்" என்னும் சொல்லமைப்பு, துறைமுகச் சுகாதார அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் மருத்துவ அலுவலர் என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.